பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
20 06 2026 SATURDAY 7 15 AM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஒடிசாவில் இன்று 47 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

2. குற்றவாளிகளை எளிதாக அடையாளம் காண வகை செய்யும் கைரேகை தொடர்பான நான்கு புதிய செயலிகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

3. மாறிவரும் உலக சூழலில் இந்தியாவின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

4. ஜம்மு காஷ்மீரில் 370-வது சட்டப்பிரிவு நீக்கப்பட்டது, அங்குள்ள மக்களின் மனநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

5. உலக கோப்பை கால்பந்து போட்டியில் Morocco 1-0 என்ற கோல்கணக்கில் ஸ்காட்லாந்தை வென்றது.

>>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஒடிசாவில் இன்று 47 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இரண்டு நாள் பயணமாக அம்மாநிலத்திற்கு செல்லும் அவர், Rairangpur-ல் நடைபெறும் விழாவில் எரிசக்தி, தொழில்துறை உள்கட்டமைப்பு, சாலை இணைப்பு, குடிநீர் வசதி, நீர்ப்பாசனம், கல்வி உள்ளிட்ட மாநிலத்தின் மிக முக்கியமான துறைகளை வலுப்படுத்தும் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் வருகையை முன்னிட்டு, Mayubhanj மாவட்டத்தில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*முன்னதாக, Pahadpur கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள திறன் மேம்பாட்டு மையத்தையும், பள்ளி ஒன்றையும் பார்வையிடும் திரு. நரேந்திர மோடி மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார்.*

>>>>><<<<<

*மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று மகாராஷ்டிரா மாநிலம் கோலாப்பூர் மற்றும் இச்சல்கரஞ்சி பகுதிகளில் இன்று பயணம் மேற்கொள்கிறார்.*

*அங்குள்ள மஹாலட்சுமி கோயில் வளாகத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை அவர் தொடங்கி வைக்கிறார்.*

*மேலும், மேற்கு மகாராஷ்டிர கோயில் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அவர் ஆய்வு மேற்கொள்ளவுள்ளார்.*

*அதனைத் தொடர்ந்து, கோலாப்பூரில் உள்ள காவல் துறை அணிவகுப்பு மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் திரு. அமித் ஷா உரையாற்றுகிறார்.*

*பின்னர் இச்சல்கரஞ்சி செல்லும் அவர், அங்குள்ள ஜனதா சககாரி வங்கியின் புதிய கட்டிடத்தைத் திறந்து வைப்பதுடன், கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றின் பெயர் மாற்றம் மற்றும் விரிவாக்க நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.*

*இச்சல்கரஞ்சியில் நடைபெறும் விவசாயிகள் கூட்டத்திலும் திரு. அமித் ஷா உரையாற்றவுள்ளார்.*

>>>>><<<<<

*குற்றவாளிகளை எளிதாக அடையாளம் காணவும், குற்ற வழக்குகளில் நீதியை விரைவாக வழங்கவும், கைரேகை தொடர்பான நான்கு புதிய செயலிகளை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.*

இந்த தொழில்நுட்பம் காவல்துறை மற்றும் நீதித்துறை அமைப்புகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று சமூகவலைதளத்தில் உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா குறிப்பிட்டுள்ளார்.

கைரேகைகளை நொடிப் பொழுதில் கண்டறிதல், DNA, கருவிழி மற்றும் முகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து குற்றவாளிகளை எளிதாக கண்டறிய இந்த தொழில்நுட்பம் உதவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வெவ்வேறு புலனாய்வு முகமைகளுக்கு இடையே, தடையற்ற டிஜிட்டல் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதன் மூலம், நீதித்துறையின் செயல்பாடுகளில் வேகமும், துல்லியமும் அதிகரிக்கும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மாறிவரும் உலக சூழலில் இந்தியாவின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய அமெரிக்க மன்றத்தின் கூட்டத்தில் பேசிய அவர், தற்போதைய பதற்றமான உலக சூழலில் நாட்டின் நலன்கள், தன்னாட்சி அதிகாரம் மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அதேவேளையில் உலகின் பல்வேறு நாடுகளுடன் உறவுகளை மேம்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அமெரிக்காவுடன் சிக்கலான விவகாரங்களை நாம் கையாண்டாலும், பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கு இடையே நல்லுறவு வலுப்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா வளர்ச்சியடைந்து வரும் நிலையில், அதன் நலன்களும் விரிவடைந்து பன்முகத்தன்மை கொண்டதாக மாறும் என்றும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் 370-வது சட்டப்பிரிவு நீக்கப்பட்டது, அங்குள்ள மக்களின் மனநிலையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்திற்கு அவர் அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜம்மு காஷ்மீரின் சிறிய நகரங்களைச் சேர்ந்த குழந்தைகள் கூட இன்று தேர்வுகளில் முதலிடம் பெறுகிறார்கள் என்றும் மக்களிடையே ஒரு புதிய எழுச்சி ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"முன்பு பெண்களுக்கு தங்கள் சொத்துக்களின் மீது உரிமை இல்லை, பாகிஸ்தானிலிருந்து வந்தவர்களுக்கு வாக்குரிமை இல்லை என்று கூறிய அவர், இப்போது அவர்கள் தங்களை இந்தியாவின் சமமான குடிமக்களாக உணர்கிறார்கள்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

370-வது சட்டப்பிரிவு இருந்தபோது, தங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டவர்களாக மக்கள் கருதியதாகவும், தற்போது தாங்களும் இந்தியாவின் ஒரு பகுதி என்ற உணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>><<<<<

வங்கிகள், சொத்து மறுசீரமைப்பு நிறுவனங்கள் மற்றும் கடன் வாங்கியவர்களுக்கு இடையே ஒரு ஆழமான ரகசியக் கூட்டணி இருப்பதாகவும், பெரிய அளவிலான கடன்

தவணைகளைத் திருப்பிச் செலுத்துவதில் முறையற்ற நடவடிக்கைகள் கையாளப்படுவதாகவும் உச்சநீதிமன்றம் அதிருப்தி தெரிவித்துள்ளது.

தலைமை நீதிபதி சூர்யா காந்த் மற்றும் நீதிபதி வி. மோகன் ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று இது தொடர்பான வழக்கினை விசாரித்த போது இதனை தெரிவித்தது.

"மக்களின் வரிப்பணமே வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது என்றும் ஆனால் இந்தக் கடனைத் திரும்பப் பெறுவதற்கான எந்தவொரு முறையான முயற்சியையும் வங்கிகள் மேற்கொள்வதில்லை என்றும் நீதிபதிகள் கூறினர்.

பொதுமக்களின் நலனுக்காகச் செலவிடப்பட வேண்டிய வரிப்பணம், இவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்படுவது மிகுந்த கவலையளிக்கிறது என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்

>>>>><<<<<

பங்குச்சந்தையை முறைப்படுத்தும் இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமான செபி முதலீட்டாளர்களின் வசதிக்காகப் பல்வேறு புதிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது.

மும்பையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒரு முதலீட்டாளர் எதிர்பாராத விதமாக மறைந்தால், அவர் வாங்கிய பங்குகளை அவரது வாரிசுதாரர்கள் பெறுவதில் இருந்த கடினமான நடைமுறைகளை எளிதாக்க, சிறிய மதிப்புள்ள பங்குகளைப் பெற ‘விரைவான பங்கு உரிமை மாற்ற நடைமுறை என்ற புதிய முறை

அறிமுகமாக உள்ளது. இதற்குத் தேவையான ஆவணங்கள் குறைக்கப்பட்டுள்ளதுடன், QR Code வசதி கொண்ட இறப்புச் சான்றிதழைக் கொண்டு எளிதில் சரிபார்க்கலாம் என செபி தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நாளை நடைபெறவுள்ள நீட் மறுதேர்வு தொடர்பான இரண்டு வெவ்வேறு மனுக்களை அவசரமாக விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி வி. மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு, இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட போது, இவை அனைத்தும் அடுத்த மாதம் நீதிபதி பி.எஸ். நரசிம்மா தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுமுறை காலம் முடிந்து, நீதிமன்றம் மீண்டும் முழுமையாக செயல்படத் தொடங்கும் போது, நீட் தேர்வு தொடர்பான அனைத்து வழக்குகளும் நீதிபதி நரசிம்மா தலைமையிலான அமர்வே விசாரிக்கும் என்று தலைமை நீதிபதி தெளிவுபடுத்தியுள்ளார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ், 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஊக்கத்தொகையினை பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று விடுவித்தார்.

முதல்முறையாக பணியில் சேரும் இளைஞர்களை ஊக்குவிப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ள இந்த திட்டம் ஊழியர்களுக்கும், நிறுவனங்களுக்கும் பயனுள்ளதாக உள்ளது என்று சேலத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஹரிக்குமார் 25 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

*அமெரிக்கா, கத்தார் மற்றும் ஈரான் நாடுகளின் தீவிர தூதரக முயற்சிகளின் பலனாக, இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பினர் இடையேயான தற்காலிகப் போர் நிறுத்தம் அமலுக்கு வந்துள்ளது.*

*இது மேற்கு ஆசியாவிற்கான அமெரிக்கா-ஈரான் அமைதி ஒப்பந்தம் சிதைந்துவிடாமல் தடுக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.*

*கடந்த சில வாரங்களாக நிலவி வந்த கடுமையான மோதல்களுக்குப் பிறகு இந்த போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*உலக கோப்பை கால்பந்து போட்டியில் Morocco 1-0 என்ற கோல்கணக்கில் ஸ்காட்லாந்தை வென்றது.*

*Boston-ல் இன்று நடைபெற்ற ஆட்டத்தில், தொடக்கம் முதலே Morocco அணி ஆதிக்கம் செலுத்தியது,*

*ஸ்காட்லாந்து அணி பலமுறை முயற்சித்த போதும், கோல் அடிக்கும் வாய்ப்புகளை Morocco அணியினர் வெற்றிகரமாக தடுத்தனர்.*

*Philadelphia-வில் Haiti அணிக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் ஆட்டத்தில் பிரேஸில் 3-0 என்ற கோல்கணக்கில் முன்னிலையில் உள்ளது. இந்த 3 கோல்களும் முதல் பாதி ஆட்டத்தில் போடப்பட்டன.*

*துருக்கி - பராகுவே அணிகளுக்கு இடையேயான ஆட்டம், சான்பிரான்சிஸ்கோவில் காலை மணி 8.30-க்கு தொடங்கவுள்ளது.*

*>>>>><<<<<*

*இந்தியா - ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறவுள்ளது.*

*இப்போட்டி சென்னை, சேப்பாக்கத்தில் பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்கவுள்ளது.*

*>>>>><<<<<*